ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1777/39 - 2012 සැප්තැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2012.09.28
*1777/39 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

*2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தென் மாகாண மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை (திருத்தம்) சட்டம்*

II ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றன.

தென் மாகாண மாகாண சபையின் நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும், போக்குவரத்து, நீர்வழங்கலும் வடிகாலமைப்பும், மின்வலு, பொறியியல் சேவை, சுகாதார சுதேச மருத்துவ மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா ஆகிய நான், 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தென் மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தென் மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை (திருத்தம்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முச்சக்கரவண்டி பயணி போக்குவரத்து சேவையினை ஒழுங்குபடுத்துவது சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளை இத்தால் அறிவிக்கின்றேன்.

ஷான் விஜயலால் டி சில்வா,
நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும்,
போக்குவரத்து, நீர்வழங்கலும் வடிகாலமைப்பும்,
மின்வலு, பொறியியல் சேவை, சுகாதார, சுதேச மருத்துவ
மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,
தென் மாகாண மாகாண சபை.

நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும், போக்குவரத்து,
நீர்வழங்கலும் வடிகாலமைப்பும், மின்வலு, பொறியியல் சேவை,
சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
தென் மாகாண மாகாண சபை.
காலி,
2012.08.24.

### கட்டளைகள்

1. இவ்வொழுங்கு விதிகள் தென் மாகாண சபையின் "2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, முச்சக்கரவண்டி போக்குவரத்துச் சேவை ஒழுங்கு விதிகள்" என அறியப்படுவதோடு இவ்வொழுங்கு விதிகள் 2012.09.15 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.

2. 2012.09.15 ஆந் திகதி தொடக்கம் தென் மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபையின் முச்சக்கரவண்டி நிரந்தர பயணி ச்சேவை அனுமதிப்பத்திரம் அல்லது பதிவு இன்றி வெவ்வேறாக கட்டணம் அறவிட்டோ அல்லது வாடகை அடிப்படையில் கட்டணம் அறவிட்டோ தென் மாகாணத்தினுள் போக்குவரத்தில் ஈடுபடலாகாது.

3. சட்டபூர்வமான முச்சக்கரவண்டி உரிமையாளருக்கே அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். அவ்வாறாக இருந்தபோதும் முச்சக்கரவண்டி ஓட்டுநருக்கு சட்டபூர்வமான உரித்து இல்லாத சந்தர்ப்பத்தில் முச்சக்கரவண்டியின் சட்டபூர்வமான உரிமையாளரினால் ஓட்டுநருக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டால் ஓட்டுநருக்கு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான அதிகாரமுண்டு. அவ்வாறாக இருந்தபோதும் முச்சக்கரவண்டியின் சட்டபூர்வமான உரிமையாளரும் அனுமதிப்பத்திர நிபந்தனைகள் சம்பந்தமான பொறுப்பிற்குட்படுவார். இக்கட்டளை அனுமதிப்பத்திர உரிமையை ஒழுங்குபடுத்தும்போது செயல்வலுவிலிருக்கும்.

4. அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்போது முச்சக்கரவண்டி தரிப்பிடத்திற்கு அண்மையில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

5. அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு புதுப்பிப்பதற்கோ அல்லது ஒரு முச்சக்கரவண்டி தரிப்பிடத்திலிருந்து பிறிதொரு முச்சக்கரவண்டி தரிப்பிடத்திற்கு மாற்றம் செய்வதற்கு அல்லது அவ்வாறான கோரிக்கைகளை நிராகரிப்பதற்கு அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு.

5. 1. இத் தெரிவைப் பயன்படுத்தும்போது கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் அதிகாரசபை கவனம் செலுத்துதல் வேண்டும்.

(அ) உரிய முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் செயற்படும் முச்சக்கரவண்டிகளிலிருந்து பயணி ப்போக்குவரத்துத் தேவை எவ்வளவு தூரத்திற்கு பூர்த்தி செய்யப்படுகின்றது என்பது பற்றி ;

(ஆ) உரிய முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தற்போது செயற்படும் முச்சக்கரவண்டிகளில் பயணி தேவை பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் அவ்விடத்திற்கு புதிய புதிய அனுமதிப்பத்திரம் வழங்குவது பொருத்தமானதா என்பது பற்றி;

(இ) முச்சக்கரவண்டி தரிப்பிடமொன்றின் அவசியம் மற்றும் அதன் தகுதி என்ன என்பது பற்றி தீர்மானித்தல் (தரிப்பிடத்திலிருந்து செயற்படாத முச்சக்கரவண்டிகள் தொடர்பில் விதிமுறைகளை தயாரிப்பது அதிகாரசபையின் பொறுப்பாகும்) ;

(ஈ) தரிப்பிடத்திற்குப் புறம்பான வேறோரு இடத்திலிருந்து பயணி போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் குறித்த அதிகாரப் பிரதேசத்திற்குரிய கிராம சேவை அலுவலரின் சிபாரிசு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி.

6. தற்போது பயணிப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள சகல முச்சக்கரவண்டிகளுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கும்போது காப்புறுதிச் சான்றிதழ் மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ். வருமான அனுமதிப்பத்திரம், தரிப்பிடத்திற்குரியதான முச்சக்கரவண்டி ஓட்டுநர்களின் சங்கத்தின் சிபாரிசு (சங்கத்தினைச் சாராத ஓட்டுநர்கள் தற்போது வாடகை அடிப்படையில் பயணிப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ளதாக பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம சேவை அலுவலரின் சிபாரிசு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்). ஓட்டுநர் முச்சக்கரவண்டியின் சட்டபூர்வமான உரித்து இல்லாத சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரம் ஓட்டுநரின் பெயருக்கு வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கடிதம் (சமாதான நீதவான் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்) மற்றும் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கான கட்டணமும்) விண்ணப்பப்படிவ கட்டணமும் செலுத்தி 2012 - 2013 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்வனுமதிப்பத்திரம் 2012- 2013 ஆம் ஆண்டிற்கு மாத்திரம் செல்லுபடியாகும்.

7. 2013 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது, புதுப்பிக்கும்போது, திருத்தம் செய்யும்போது. விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் ஒரு மாதத்திற்குள் அனுமதிப்பத்திர உரிமையாளரினால் அல்லது சங்கமாக இருப்பின் அதில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் குறித்த மாதிரிப்படிவத்திற்கு அமைவாக (பின்னிணைப்பு I) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ் விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களுடன் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7.1 முச்சக்கரவண்டி பதிவு செய்யப்பட்டமைக்கான அத்தாட்சி அல்லது அத்தகைய பதிவினை செய்தமை தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் சான்றிதழின் புகைப்படப்பிரதி.

7.2 முச்சக்கரவண்டியில் பயணம் செய்யும் பிரயாணிகள் சகலருக்குமான பூரண காப்புறுதியை உள்ளடக்கிய காப்புறுதிப்பத்திரம்.

7.3 தென் மாகாண மோட்டார் வாகன ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட வருடாந்த வருமான அனுமதிப்பத்திரமும் அதன் புகைப்படப்பிரதியும் (2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஆரம்ப அனுமதிப்பத்திரமாயின் அந்த மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் வருமான அனுமதிப்பத்திரம்).

7. 4 சாரதி அனுமதிப்பத்திரத்தின் புகைப்படப் பிரதி.

7. 5 அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதாயின் தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமும் லேபலும்.

7.6 அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டு.

7. 7. தேவையான சந்தர்ப்பத்தில் அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முச்சக்கரவண்டி ஓட்டுநர்களின் சங்கத்தினால் வழங்கப்பட்ட அங்கத்துவ சான்றிதழ்.

8. அனுமதிப்பத்திரம் இரண்டாவது பின்னிணைப்புக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திர லேபல் (விண்ட்ஸ்கிரீன் லேபல்) இது மூன்றாவது பின்னிணைப்புக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

10. அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் நான்காவது பின்னிணைப்புக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

11. அனுமதிப்பத்திரத்திற்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பப்படிவங்களும் அவ்வனுமதிப்பத்திரம் செல்லுபடியாவதற்கு விண்ணப்பிப்பவரால் எதிர்பார்க்கப்படும் தினத்திற்கு ஒரு மாதத்திற்கு குறையாத கால அளவிற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் உள்ளடக்கப்படும்.

12. 1 எவரேனும் ஒருவருக்கு வழங்கப்பட்ட பயணிச் சேவை அனுமதிப்பத்திரத்தை அவரது விருப்பப்படி வேறு ஒருவருக்கு வழங்கலாகாது. அவ்வாறு வழங்குவது சட்டவலிதற்றதாகும். அவ்வாறானசந்தர்ப்பம் தெரியவருமிடத்து அவ்வனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறாக இருந்தபோதும் அதிகாரசபையின் கொள்கைகளுக்கும் பங்கம் ஏற்படாமலும் சிறந்த போக்குவரத்து சேவைக்காக அவசியம் என அதிகாரசபை கருதும் சந்தர்ப்பங்களில் அனுமதிப்பத்திர உரிமையினை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை அதிகாரசபை எடுக்க முடியும்.

12.2 வேறுவகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி வழங்கப்படும் தினத்திலிருந்து 12 மாத காலத்திற்கு அனுமதிப்பத்திரம் செயல்வலுவிலிருக்கும்.

12. 3 அனுமதிப்பத்திர உரிமையாளர் மற்றும் அவரது சேவையாளரினால் உரிய சேவையினை வழங்குவதற்காக ஈடுபடுத்தப்படும் முச்சக்கரவண்டியின் இயந்திரம் நல்ல நிலையில் இருப்பதும் ஓடக்கூடிய தன்மை மற்றும் சுத்தமான நிலை என்பனவற்றின் மூலம் பராமரிக்கப்படல் வேண்டும்.

12.4 இவ்வொழுங்கு விதிகளில் அனுமதிப்பத்திர உரிமையாளரின் பொறுப்புக்களும் முச்சக்கரவண்டி சாரதிகளின் பொறுப்புக்களும் அனுமதிப்பத்திரத்திற்கான விதிகளும் நிபந்தனைகளுமென கருதப்படல் வேண்டும்.

12.5 சேவையின் தரம் பயணிகளின் பாதுகாப்புக்காக அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படும் ஏற்பாடுகளை செயற்படுத்தல் வேண்டும்.

13. முச்சக்கரவண்டியில் காட்சிப்படுத்தப்பட வேண்டிய மற்றும் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள்.

13.1 சாரதி, முச்சக்கரவண்டியில் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் :

(அ) அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதி (இணைப்பு 2) ;
(ஆ) லேபல் (இணைப்பு 3) ;
(இ) அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட முச்சக்கரவண்டி வாடகை கட்டணப் பட்டியல் ;
(ஈ) மோட்டார் வாகன போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் கீழ் வைத்திருக்கவேண்டியவை ;

(i) வருமான அனுமதிப்பத்திரம் ;
(ii) காப்புறுதிப்பத்திரம் ;
(iii) சாரதி அனுமதிப்பத்திரம்.

13. 2 காட்சிப்படுத்தப்பட வேண்டியவை :

(அ) அனுமதிப்பத்திர ஆவணத்தின் புகைப்படப்பிரதி ;
(ஆ) நிர்ணயிக்கப்பட்ட கட்டண சூத்திரத்தை தெரிவிக்கும் கட்டணப்பட்டியல் ;
(இ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர இலக்கமும் முச்சக்கர வண்டியின் பதிவிலக்கமும் .

14. அனுமதிப்பத்திர உரிமையாளரின் பொறுப்புக்கள் ;

14.1 போக்குவரத்துச் சேவையின் மேம்பாடு மற்றும் பரிபாலன வசதிக்காக அனுமதிப்பத்திர உரிமையாளரினால் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட முச்சக்கரவண்டி சங்கமொன்றின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

14.2 முச்சக்கரவண்டி, ஏதேனும் திடீர் விபத்துக்குள்ளாகி 7 தினங்களுக்குள் முச்சக்கரவண்டி சங்கத்தினூடாக அதிகாரிகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

143. பாரதூரமான அல்லது மரணம் சம்பவித்த வாகன விபத்து சம்பந்தமாகவெனில் புதிய தகுதிச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படும் வரை முச்சக்கரவண்டியினை செலுத்துதல் கூடாது.

14.4. மரணம் சம்பவித்த வாகன விபத்து ஏற்பட்ட முச்சக்கரவண்டியின் சாரதியொருவர் தேகாரோக்கியத்துடன் இருப்பதாக உறுதிப்படுத்தப்படும் வரை மீண்டும் சேவையில் ஈடுபடலாகாது (மரணம் சம்பவித்த விபத்து என்பது விபத்துக்குள்ளான நபரொருவர் அக்காரணத்தினாலேயே மரணமடைதலைக் குறிக்கும்).

14.5. ஏனைய ஓட்டுநர்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் எல்லா வகையிலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

15. முச்சக்கரவண்டி சாரதியின் பொறுப்புக்கள் :

15. 1 முச்சக்கரவண்டியில் பிரயாணம் செய்யும் சகல பிரயாணிகளதும் பாதுகாப்பு, சௌகரியம் நம்பிக்கையினை உறுதிப்படுத்தும் வகையில் முச்சக்கரவண்டியை செலுத்துதல் வேண்டும்.

15.2 அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையை விட அதிக பயணிகளுடன் முச்சக்கரவண்டியை செலுத்துதல் கூடாது.

15.3 சிறந்த நடத்தையுடனும் நற்பண்புடனும் இருக்க வேண்டும் என்பதோடு சகல பயணிகளிடமும் அரச மற்றும் வேறு உத்தியோகத்தர்களிடமும் பண்பாட்டு விழுமியங்களுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

15.4 மதுபானம் அல்லது போதைவஸ்து பயன்படுத்திய நிலையில் சேவையில் ஈடுபடுவதோ சேவைக் காலத்தினுள் மதுபானம் அல்லது போதைவஸ்து பயன்படுத்துவதோ கூடாது.

15.5 முச்சக்கரவண்டியினுள் எவரும் புகைபிடிக்க அனுமதிக்கக்கூடாது.

15. 6 அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் எச்சந்தர்ப்பத்திலும் முச்சக்கரவண்டியையும் இயைபுடைய ஆவணங்களையும் பரீட்சிப்பதற்கு கோரப்படும் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

15.7 முச்சக்கரவண்டி சாரதிகள் அதிகாரசபையினால் அவ்வப்போது நடாத்தப்படும் பயிற்சி அமர்வுகளில் பங்குபற்றுதல் வேண்டும்.

15.8 முச்சக்கரவண்டி தரிப்பிடத்திற்குட்பட்ட நிர்ணயிக்கப்பட்ட இடத்தைத் தவிர வேறு தரிப்பிடத்தில் நெருக்கடி ஏற்படும் விதத்தில் முச்சக்கரவண்டியை நிறுத்தி வைத்தல் கூடாது.

15.9 முச்சக்கரவண்டியில் சேவையாற்றும் ஒவ்வொரு தருணத்திலும் அதிகார சபையினால் நிர்ணயிக்கப்பட்ட சீருடையினை அணிந்து சேவையாற்றுதல் வேண்டும்.

15.10 திடீர் விபத்து, தொழில்நுட்பக் கோளாறு போன்ற தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் அந்த திடீர் விபத்து, தொழில்நுட்பக் கோளாறு இடம்பெற்ற இடம் வரை மாத்திரம் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பயணிக்கு மாற்று வாகன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க சகல நடவடிக்கைகளும் எடுத்தல் வேண்டும்.

15.11 எவரேனும் பயணியிடம் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தைவிட அதிகமான அல்லது குறைவான கட்டணத்தை அறவிடல் அல்லது பெற்றுக்கொள்ளல் கூடாது.

15.12 நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ அதிகார துஷ்பிரயோகம், பெண்களுக்கெதிரான வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.

16. பிரயாணிகளின் பொறுப்புக்கள்.

16.1 முச்சக்கரவண்டியினுள் புகைத்தல், மது அருந்துதல் அல்லது போதைவஸ்து பயன்படுத்துதல் கூடாது.

16.2 முச்சக்கரவண்டியினுள் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும்.

17. முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் அமைப்பின் பொறுப்புக்கள்.

17. 1 எவரேனும் முச்சக்கரவண்டி ஓட்டுநர் அமைப்பிற்கு அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்ளல் மற்றும் சட்டரீதியான பின்புலத்தின் கீழ் அமைப்பினை கொண்டு நடாத்துதல் அவ்வமைப்பிற்குரிய பொறுப்பாகும்.

17. 2 அனைத்து பிரதேச செயலாளர் பிரிவின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்கும் முச்சக்கரவண்டி ஓட்டுநர் அமைப்புக்கள் இருத்தல் வேண்டும்.

17.3 இவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக ஓட்டுநர்கள் செயற்படுகின்றனரா என்பதை கவனித்துக் கொள்ளல் அவ்வமைப்பிற்குரிய பொறுப்பாகும்.

17.4 இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை அமைப்பினது யாப்பில் உட்சேர்த்தல் வேண்டும்.

17. 5 அதிகாரசபையினால் கோரப்படும் சிபாரிசு மற்றும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்போது அதிகாரசபைக்கு தேவையான உதவிகளை வழங்கி அதிகாரசபையுடன் ஓட்டுநர் அமைப்புக்கள் சிறந்த தொடர்பினைப் பேணல் வேண்டும்.

17.6 முச்சக்கரவண்டி சேவையினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் சீர்செய்தல் சம்பந்தமாக அவ்வப்போது அதிகாரசபையினால் பொருத்தமானதெனக் கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளைச் செயற்படுத்துதல் அவ்வமைப்பிற்குரிய பொறுப்பாகும்.

18. முச்சக்கரவண்டி தரிப்பிடம் தொடர்பான ஒழுங்குவிதிகள் :

18.1 உள்ளூராட்சிமன்றங்கள், பொலிஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை அல்லது அதிகாரசபையின் உடன்பாட்டுடன் தேவையான முச்சக்கரவண்டி தரிப்பிடங்களை தாபித்துக்கொள்ளுதல் வேண்டும்.

18.2 அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் கீழ் முச்சக்கரவண்டி அமைப்பினால் அந்த தரிப்பிடத்தின் கட்டுப்பாடும் நிர்வாகமும் செய்யப்படல் வேண்டும்.

18. 3 உள்ளூராட்சிமன்றங்களுக்கு முச்சக்கரவண்டி தரிப்பிடங்களினால் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் அந்தந்த அனுமதிப்பத்திர உரிமையாளரினால் அல்லது அமைப்பினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

19. முச்சக்கரவண்டி சாரதிகளினால் கட்டளைகள் மீறப்படுவது சம்பந்தமாக அனுமதிப்பத்திர உரிமையாளரே பொறுப்புக்கூறவேண்டியவராவார்.

20. கட்டண மீற்றர் பொருத்தப்படல் வேண்டும். அதிகாரசபையினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் கட்டணப்பட்டியலின் அமைவாக சீர்செய்யப்படுதலும் வேண்டும்.

21. இக்கட்டளையின் கீழ் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திர உரிமையாளரொருவரினால் அதிகாரசபையிடம் அதனைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்கப்படும் பட்சத்தில் அவ் அனுமதிப்பத்திர உரிமையாளர் :

(i) இக்கட்டளைகளுக்கு அமைவாக அத்துடன்/அல்லது அதனகத்து குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக செயற்பட்டுள்ளார் என்றும் ;

(ii) இக்கட்டளைகளின் கீழும் அதனகத்து குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை மீறி ஏதேனும் தவறிழைத்த குற்றவாளியாக காணப்பட்ட ஒருவரல்ல என்றும் ;

(iii) அதிகாரசபைக்கு செலுத்தப்படவேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட சகல கட்டணங்களையும் செலுத்தியிருப்பதோடு ஏனைய இயைபுடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திருப்பதாகவும் ;

திருப்தியடையும் பட்சத்தில் அவ் அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் தினத்தை தாண்டிய தினத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு அல்லது அதைவிட குறைந்த காலத்திற்கு அவ்வனுமதிப்பத்திரம் அதிகாரசபையினால் புதுப்பித்து வழங்கப்படும்.

22. இந்த கட்டளைகளை மீறல் விலகிச் செயற்படல், கருத்திலெடுக்காது செயற்படும் எவரேனும் ஒருவர் குற்றமிழைத்தவராவார்.

23. அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களோ அல்லது சோதனைக்குழுவினராலோ செய்யப்படும் சோதனைகளில் இக்கட்டளையின் பின்னிணைப்பு 5 இன் கீழுள்ள கட்டளை மீறப்பட்டுள்ளதாக அந்த கட்டளையை மீறிய தரப்பாக ஏற்கப்படும் சந்தர்ப்பத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு.

(i) சோதனையின்போது நிரூபணமாகும் கட்டளை மீறலை எதிர்காலத்தில் செய்வதில்லை என்றோ அல்லது சரிசெய்து கொள்வதாகவோ வெளிப்படுத்துகை ஒன்றில் கையொப்பமிடல் ;

(ii) இணைப்பு 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தவறு சம்பந்தமாக 400 ரூபா அதிகாரசபையினால் அறவீடு செய்யப்படுவதற்கு ;

(iii) மேலே (i) மற்றும் (ii) ஆகிய நடவடிக்கைகள் இரண்டையும் எடுப்பதற்கு ;

(iv) அனுமதிப்பத்திர உரிமையாளர் மேலே (i) மற்றும் (ii) இன் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படாவிட்டால் அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு எதிராக 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தென் மாகாண மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை கட்டளைச் சட்டத்தின் 23 ஆம் அல்லது 42 ஆம் பிரிவிற்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு.

24. முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் அமைப்பு பின்பற்றவேண்டிய செயல்முறைகள் சம்பந்தமாக அறிவுரைகளை வழங்குவதற்கும். அவர்களது செயற்பாட்டறிக்கை அதிகாரசபைக்கு அளிக்கவேண்டிய அறிக்கைகள் மற்றும் வாகனத்தில் காட்சிப்படுத்தப்படவேண்டிய அறிவித்தல்கள் சம்பந்தமாகவும் அறிவுரைகளை வழங்குவதற்கும் அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு.

*இணைப்பு I*

**தென் மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை**

*முச்சக்கரவண்டி பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பப்படிவம்*

1. தற்போது அனுமதிப்பத்திரம் இருப்பின் அதன் இலக்கம் : [ ]

2. முச்சக்கரவண்டியின் இலக்கம் : [ ]

3. முச்சக்கரவண்டி தரிப்பிடம் :..........................................................................................

4. விண்ணப்பதாரியின் வீட்டிலிருந்து முச்சக்கரவண்டி தரிப்பிடம் வரையான தூரம் கி. மீ. :...............................................

5. விண்ணப்பதாரி தொடர்பான தகவல்கள் :

5.1 முழுப்பெயர் :..........................................................................................................................

.............................. ...........................................................................................................

5.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :....................................................................................................

..............................................................................................................................................

5.3 முகவரி :

..............................................................................................................................................

..............................................................................................................................................

5.4 தொலைபேசி இலக்கம் :...............................................................................................................

5.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :.........................................................................................

5.6 பிறந்த திகதி :........................................................................................

5.7 விகாகமானராயின் வாழ்க்கைத்துணையின் பெயரும் முகவரியும் :............................... .......................................

..............................................................................................................................................

5.8 விண்ணப்பதாரியின் வதிவிடம் தொடர்பான தகவல்கள் :

5.8.1 மாகாணம் :
..........................................................................................................................
5.8.2 மாவட்டம் :
..........................................................................................................................
5.8. 3 பிரதேச செயலாளர் பிரிவு :................................................................................................
5. 8. 4 பொலிஸ் பிரிவு :..................................................................................................................
5.8. 5 கிராம சேவகர் பிரிவு :.........................................................................................................

5.9 விண்ணப்பதாரி அரச திணைக்களமொன்றில்/கூட்டுத்தாபனமொன்றில் /நியதிச்சட்ட சபையொன்றில்/படைதாங்கு சேவையில் தற்போது சேவையாற்றுபவரா? (ஆம் /இல்லை) :

5.9.1 ஆம் எனில் குறித்த நிறுவனத்தின் பெயர் :.....................................................................

5.10 வங்கிக் கணக்கு விவரம் :.......................................................................................................

5.10.1 வங்கியின் பெயர் :...............................................................................................
5.10.2 வங்கிக் கிளை :...................................................................................................
5.10.3 கணக்கு இலக்கம் :...............................................................................................

6. காப்புறுதி தொடர்பான விவரங்கள் :

6.1 காப்புறுதி நிறுவனத்தின்/கூட்டுத்தாபனத்தின் பெயர் :...........................................................
6.2 காப்புறுதி வகை :.......................................................................................................
6.3 காலாவதி திகதி :.......................................................................................................

7. வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான விவரங்கள் :

7.1 வருமான அனுமதிப்பத்திரத்தின் காலாவதித் திகதி :..........................................................
7.2 பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் : ...................................................................................

8. முச்சக்கரவண்டி சாரதி தொடர்பான தகவல்கள் :
(உரிமையாளர் முச்சக்கரவண்டிச் சாரதியாக செயற்படுவாராயின் 8.1 தொடக்கம் 8.6 வரை பூரணப்படுத்தத் தேவையில்லை).

8.1 முழுப்பெயர் :.......................................................................................................

..........................................................................................................................
8.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ......................................................................................
8.3 முகவரி :.......................................................................................................

..........................................................................................................................

8.4 தொலைபேசி இலக்கம் :.................................................................................................
8.5 தேசிய அடையாள அட்டை இல. :........................................................................................
8.6 பிறந்த திகதி :.......................................................................................................
8.7 முச்சக்கரவண்டிச் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :.........................................................
8.8 முச்சக்கரவண்டிச் சாரதி அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட திகதி :...................................................
8.9 முச்சக்கரவண்டிச் சாரதி அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் திகதி :..............................................

9. தென் மாகாண வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகாரசபையினால் நடாத்தப்படும் முச்சக்கரவண்டிச் சாரதி பயிற்சி நெறியில் பங்குபற்றியுள்ளாரா? (ஆம் /இல்லை) *

9.1 ஆமெனில் திகதியும் இடமும் :................................................................... ..................................

10. சங்கமொன்றில் பதிவுசெய்யப்பட்டிருப்பின் அது தொடர்பான விவரங்கள் :

10.1 சங்கத்தின் பெயர் :.......................................................................................................
10.2 அங்கத்துவ இலக்கம் :...................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானதும், சரியானதுமென உறுதியளிக்கின்றேன். எனக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் தொடர்பான நிபந்தனைகள் மீறப்படுமாயின் அல்லது

அதிகாரசபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயற்படாதுவிடின் எனது அனுமதிப்பத்திரத்தை அதிகாரசபையினால் மீளபெற்றுக் கொள்வதற்கோ/இடைநிறுத்துவதற்கோ/இரத்துச் செய்வதற்கோ அல்லது சட்டப்படி தண்டனைக்குட்படுத்தப்படுவதற்கோ ஆளாவேன் என நன்கறிவேன்.

திகதி :..................................................................................................

.......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

* பொருத்தமற்றதை கீறிவிடுக.

இணைப்பு 1 (அ)

**விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்**

1. முச்சக்கரவண்டி பதிவு செய்யபபட்டமைக்கான அத்தாட்சி அல்லது அத்தகைய பதிவினை செய்தமை தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் சான்றிதழின் புகைப்படப் பிரதி.

2. முச்சக்கரவண்டியில் பயணம் செய்யும் பிரயாணிகள் சகலருக்குமான பூரண காப்புறுதி செய்யப்பட்ட காப்புறுதிச் சான்றிதழ் ;

3. தென் மாகாண மோட்டார் வாகன ஆணையாளரால் வழங்கப்பட்ட வருடாந்த வருமான அனுமதிப்பத்திரமும் அதன் புகைப்படப் பிரதியும் (2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஆரம்ப அனுமதிப்பத்திரத்திற்காக வேறு மாகாணத்திற்குரிய மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரரொருவரினால் வழங்கப்பட்ட வருடாந்த வருமான அனுமதிப்பத்திரத்துடன் முச்சக்கரவண்டியொன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் அந்த மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் வருமான அனுமதிப்பத்திரம்).

4. சாரதி அனுமதிப்பத்திரத்தின் புகைப்படப்பிரதி.

5. அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காகவெனில், தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமும் லேபலும்.

6. அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு.


7. ஓட்டுநர் முச்சக்கரவண்டியின் நிரந்தர உரிமையாளர் அல்லாத சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரம் ஓட்டுநரின் பெயருக்கு வழங்குவதற்கு அதிகாரமளிக்கும் கடிதம் (சமாதான நீதவான் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதம்).

8. அவசியம் ஏற்படுமிடத்து அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட முச்சக்கரவண்டிச் சாரதிகள் அமைப்பினால் வழங்கப்பட்ட அங்கத்துவச் சான்றிதழ்.

இணைப்பு 2

**முச்சக்கரவண்டி நிரந்தர பயணிச் சேவை அனுமதிப்பத்திரம்**

1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தென் மாகாண மாகாண வீதிப் பயணிப்போக்குவரத்து அதிகாரசபை சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தென் மாகாண மாகாண வீதிப் பயணி ப்போக்குவரத்து அதிகாரசபை திருத்தச் சட்டத்திற்கு அமைவாக வழங்கப்பட்டது.



Commencing Date :
Book No :
Seating Capacity :
Parking Place :
Validity Period : From To
Service Time :
L.G. Authority :
Police Division :
Date :

Chairman/Director General
Southern Provincial Road Passenger Transport Authority


SOUTHERN PROVINCIAL ROAD
PASSENGER TRANSPORT AUTHORITY
STATUTE No.02 OF 1996 & AMENDED STATUTE No.01 OF 2009
PASSENGER SEVICE PERMIT FOR THE OPERATION OF A
REGULER SERVICE FOR THE CARRIAGE OF PERSONS
(SECTION 11)
SPRPTA

REGULAR THREE-WHEELER
PASSENGER SERVICE PERMIT

Permit No
Owner Name :
N.I.C No :
Three-Wheeler No
Address :

*இணைப்பு 3*

**அனுமதிப்பத்திர லேபல்**



දකුණු පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය
தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை
SOUTHERN PROVINCIAL ROAD

ත්‍රීරෝද රථ නිත්‍ය මගී සේවා අවසර පත්‍රය
முச்சக்கரவண்டி நிரந்தர பயணி சேவை அனுமதிப்பத்திரம்
THREE-WHEELER REGULAR PASSENGER SERVICE PERMIT

| අංකය ත්‍රීරෝද රථ අංකය / முச்சக்கரவண்டியின் இலக்கம் /Three-Wheeler No | අවසර අවසර පත්‍ර අංකය / அனுமதிப்பத்திர இல / Permit No |
|---|---|

නැවතුම් ස්ථානය නැවතුම් පොළ /தரிப்பிடம் / Parking Place

වලංගු වලංගු කාලය / செல்லுபடியாகும் காலம் / Validity Period

සිට / இருந்து / From

දක්වා/வரை / To

කාලසේවා කාලය / சேவை காலம் / Service Time :

පළාත් පාලන ආයතනය உள்ளூராட்சி மன்றம் / Local Government Authority :

Date :

No. A 10 0000715

සභාපති தலைவர் / Chairman/
අධ්‍යක්ෂ ජෙනරාල් / பொதுப்பணிப்பாளர் / Director General
දකුණු පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය / தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை
Southern Provincial Road Passenger Transport Authority

---

දකුණු පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය
தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை
SOUTHERN PROVINCIAL ROAD
PASSENGER TRANSPORT AUTHORITY

SPRPTA

ත්‍රීරෝද රථ නිත්‍ය මගී සේවා අවසර පත්‍රය
முச்சக்கரவண்டி நிரந்தர பயணி சேவை அனுமதிப்பத்திரம்
REGULAR THREE-WHEELER PASSENGER SERVICE PERMIT

| අවසර පත්‍ර අංකය / அனுமதிப்பத்திர இல / Permit No | ත්‍රීරෝද රථ අංකය ත්‍රීරෝද රථ අංකය / முச்சக்கரவண்டியின் இலக்கம் / Three-Wheeler No |
|---|---|

නැවතුම් ස්ථානය ස්ථානය නැවතුම් පොළ / தரிப்பிடம் / Parking Place

වලංගු වලංගු කාලය / செல்லுபடியாகும் காலம் / Validity Period

සිට / இருந்து / From දක්වා / வரை / To

සේවා කාලසේවා කාලය / சேவை காலம் / Service Time :

පළාත් පාලන ආයතනය පළාත් පාලන ආයතනය / உள்ளூராட்சி மன்றம் / Local Government Authority :

පොලිස් වසම / பொலிஸ் பிரிவு / Police Division :

Date :

No. A 10 0000715

සභාපති தலைவர் / Chairman / අධ්‍යක්ෂ ජෙනරාල් / பொதுப்பணிப்பாளர் / Director General
දකුණු පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය / தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை
Southern Provincial Road Passenger Transport Authority

*இணைப்பு 4*

**அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணங்கள்**

இந்தக் கட்டளை முச்சக்கரவண்டி மூலம் பயணி /போக்குவரத்துச் செய்தல் கட்டளையென அறியப்படுதல் வேண்டும். இதிலுள்ள இணைப்பில் I ஆம் நிரலில் காணப்படும் ஏதேனும் விடயமொன்றிற்கான செயற்பாட்டிற்காக செலுத்தப்படவேண்டிய கட்டணம் II ஆம் நிலலில் நேரொத்த விதத்தில் காணப்படும் கட்டண அளவாக இருத்தல் வேண்டும்.

| | I ஆம் நிரல் செயற்பாடுகள் | II ஆம் நிரல் செலுத்தப்பட வேண்டிய கட்டணத் தொகை ரூபா சதம் |
|---|---|---|
| 1. | வருடாந்த சேவைக் கட்டணம். | 500.00 |
| 2. | முச்சக்கரவண்டி நிரந்தர பயணி ச்சேவை அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் வருடாந்தக் கட்டணம். | 100.00 |
| 3. | முச்சக்கரவண்டி நிரந்தர பயணிச் சேவை அனுமதிப்பத்திரத்தை குறித்த தினத்தில் நீடிக்காததன் காரணமாக ஓட்டுமொத்த நிலுவைத் தொகை 10% மேலதிகமாக அறவிடல்). | |
| 4. | முச்சக்கரவண்டி நிரந்தர பயணிச் சேவை அனுமதிப்பத்திரம் காணாமல் போனதற்காக பிரதி யொன்றை வழங்குதல். | 250.00 |
| 5. | முச்சக்கரவண்டி நிரந்தர பயணிச் சேவை அனுமதிப்பத்திர லேபல் (பிரதி) | 100.00 |
| 6. | முச்சக்கரவண்டி நிரந்தர பயணி சேவை அனுமதிப்பத்திரமொன்று வழங்குதல் | 1,000.00 |
| 7. | முச்சக்கரவண்டி அனுமதிப்பத்திர உரிமையினை சீர்செய்தல் கட்டணம் | 2,000.00 |
| 8. | அனுமதிப்பத்திர உரிமையாளர் மரணமடையும் பட்சத்தில் சட்டபூர்வமான உரித்துடைமை உடய நபருக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் (மனைவி/கணவன்/பிள்ளை). | |
| 9. | அனுமதிப்பத்திர உரிமையாளர் மரணமடையும் பட்சத்தில் சட்டபூர்வமான உரித்துடைமை அல்லாத நபருக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் (இலக்கம் 7 இற்கான கட்டண முறை ஏற்புடையதாகும்) (அதேபோன்று (இலக்கம் 1 மற்றும் இலக்கம் 2 இற்கான கட்டணங்களும் சேர்க்கப்படல் வேண்டும்.) | |
| 10. | முச்சக்கரவண்டி நிரந்தர பயணிச் சேவை அனுமதிப்பத்திரத்திற்காக வேறு முச்சக்கரவண்டி யொன்றினை ஈடுபடுத்தல். | 5.00.00 |
| 11. | முச்சக்கரவண்டி தரிப்பிடத்தை மாற்றுதல் | 500.00 |

*இணைப்பு 5*

**குற்றங்கள்**

1. அனுமதிப்பத்திர லேபலை காட்சிப்படுத்தாமை
2. கட்டணப்பட்டியலை காட்சிப்படுத்தாமை
3. முச்சக்கரவண்டியில் அனுமதிக்கப்பட்ட பயணிகள் எண்ணிக்கையை குறிப்பிடாமை
4. அனுமதிப்பத்திர இலக்கத்தை முச்சக்கரவண்டியில் குறிப்பிடாமை
5. சாரதி சீருடையினை அணியாது பயணி போக்குவரத்தில் ஈடுபடுதல்
6. கட்டண மீற்றர் பொருத்தாமை
7. அனுமதிப்பத்திரமின்றி முச்சக்கரவண்டியை செலுத்தல்
8. மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை அருகில் வைத்திருக்காது முச்சக்கரவண்டியை செலுத்துதல்
9. அனைத்து முச்சக்கரவண்டிகளினதும் வருமானங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் விரும்பியவாறு வாகனத்தை செலுத்தியதாக நிரூபிக்கப்படல்
10. அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் கட்டளை அறிவுரைகளுக்கு கட்டுப்படாது வாகனத்தை செலுத்துதல்.
11. அனுமதிக்கப்பட்ட கட்டணத்தை அறவிடாமை
12. அனுமதிக்கப்பட்ட தரிப்பிடத்திற்குப் புறம்பான தரிப்பிடத்திலிருந்து வேறு ஓட்டுநர்களின் வருமானத்தை பாதிக்கும் வகையில் சேவையில் ஈடுபடல்
13. பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில் ஒலி எழுப்பும் கருவியினைப் பயன்படுத்தல்
14. வேறு தவறுகள்

இவ்வொழுங்குவிதித் தொகுதியில் சிங்கள/தமிழ்/ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

**வரைவிலக்கணம் :**

*1. ஓட்டுநர்களின் அமைப்பு என்பது, நிறுவனச் சட்டம்,. கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலோ வேறு அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றில் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று/இயக்கம் அல்லது தென் மாகாண மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட இயக்கமாகும்.*

*2. முச்சக்கரவண்டி தரிப்பிடம் என்பதனால் கருதப்படுவது: ஒரு ஓட்டுநரை விட அதிகமான எண்ணிக்கையான ஓட்டுநர்கள் உள்ள வாடகை அடிப்படையில் பயணி போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காக முச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடமாகும்.*

*10- 603/1*

---

**தென் மாகாண மாகாண சபை**

*2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வீதிப் பயணிப் போக்குவரத்து, அதிகாரசபை (திருத்தம்) சட்டம்*

*II ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றன*

*தென் மாகாண மாகாண சபையின் நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும், போக்குவரத்து, நீர்வழங்கல் வடிகாலமைப்பு, மின்வலு, பொறியியல் சேவை, சுகாதார சுதேச மருத்துவ மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா ஆகிய நான், 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தென் மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தென் மாகாண மாகாண வீதிப் பயணி ப்போக்குவரத்து அதிகாரசபை (திருத்தம்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*ஷான் விஜயலால் டி சில்வா,*
*நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும்,*
*போக்குவரத்து, நீர்வழங்கல் வடிகாலமைப்பு,*
*மின்வலு, பொறியியல் சேவை, சுகாதார, சுதேச மருத்துவ*
*மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,*
*தென் மாகாண மாகாண சபை.*

*நிதி, திட்டமிடல் நீதியும் சமாதானமும் போக்குவரத்து,*
*நீர்வழங்கல் வடிகாலமைப்பு,மின்வலு, பொறியியல் சேவை,*
*சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,*
*தென் மாகாண மாகாண சபை.*
*காலி,*
*2012,ஓகத்து 24.*

**கட்டளைகள்**

*1. இவ்வொழுங்கு விதிகள் தென் மாகாண சபையின் "2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை ஒழுங்கு விதிகள்" என அறியப்படுவதோடு இவ்வொழுங்கு விதிகள் 2012.09.15 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.*

*2. 2012.09.15 ஆந் திகதி தொடக்கம் தென் மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபையின் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் அல்லது பதிவு இன்றி வெவ்வேறாக கட்டணம் அறவிட்டோ அல்லது வாடகை அடிப்படையில் கட்டணம் அறவிட்டோ தென் மாகாணத்தினுள் பாடசாலை மாணவர் போக்குவரத்தில் ஈடுபடலாகாது.*

*3. சட்டபூர்வமான வாகன உரிமையாளரின் பெயருக்கே அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.*

*4. அனுமதிப்பத்திரம் வழங்க வழங்குவதற்கு புதுப்பிப்பதற்கு அல்லது அவ்வாறான கோரிக்கையினை நிராகரிப்பதற்கு அதிகார சபைக்கு அதிகாரமுண்டு*

4. 1. இத் தெரிவைப் பயன்படுத்தும்போது கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் அதிகாரசபை கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(அ) உரிய பாதையில் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவையினை நடாத்துவதற்காக அதுவும் அதனோடு தொடர்புபட்ட பயணிகளின் கோரிக்கை மற்றும் போக்குவரத்துத் தேவை எவ்வளவு தூரத்திற்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி.

(ஆ) உரிய பாதையில் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான தேவை பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் அந்தப் பாதைக்கு புதிய அனுமதிப்பத்திரம் வழங்குவது தகுதியானதா என்பது பற்றி.

(இ) பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவையின் கீழ் உரிய கால அளவினுள் சேவையினை வழங்கக்கூடிய பாடசாலைகள் எவை என்பது பற்றி (அவ்வாறில்லாதவிடத்து அது தொடர்பில் விதிமுறைகளை தயாரிப்பது அதிகாரசபையின் பொறுப்பாகும்.)

(ஈ) விண்ணப்பதாரிக்கு பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவையினை நடாத்துவதற்கு ஆற்றல் உள்ளதா என்பது பற்றி ;

(உ) பாடசாலை சேவையின் காரணமாக நகரினுள் பாதையில் நெருக்கடி மேலும் அதிகரிக்குமா என்பது பற்றி ;

(ஊ) தரமானதும் சட்டபூர்வமாகவும் சேவையினை வழங்க முடியுமா இல்லாவிட்டால் ஏலவே வழங்கப்பட்டுள்ளதா என்பது பற்றி ;

(எ) பஸ் சேவை நடாத்தப்படாத பாதையில் எந்தளவு தூரம் பிரயோசனமானது என்பது பற்றி.

5. அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்போது, புதுப்பிக்கும்போது, மாற்றம் செய்யும் போது அல்லது திருத்தம் செய்யும் போது அனைத்து விண்ணப்பப்படிவங்களும் ஒரு மாதத்தினுள் விண்ணப்பதாரியினால் அல்லது அமைப்பொன்றாயின் அதன் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் குறித்த மாதிரிப்படிவத்திற்கு அமைவாக (அட்டவணை I ) சமர்ப்பிக்கப்படல் வேண்டும் இவ் விண்ணப்பப்படிவத்துடன் அட்டவணை I (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களும் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. பாடசாலை மாணவர் போக்குவரத்து கட்டணம் தேசிய கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் வரை தென் மாகாணத்திற்குரிய கட்டணப்பட்டியல் தயாரிப்பதற்கு அதிகாரசபையினால் முடியும்.

7. 2012- 2013 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போது தற்போது பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அனைத்து வாகனங்களுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இந்தச் சந்தர்ப்பத்தில் தற்போது பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவையில் ஈடுபடுவதாக வாகனம் செலுத்துவோர் கீழ்க்குறிப்பிடப்படும் முறையில் உறுதிப்படுத்தல் வேண்டும்.

7.1 அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட செலுத்துவோர் அமைப்பினால் சிபாரிசு செய்யப்பட்ட கடிதம் மூலமாக.

7.2 அமைப்பொன்றினை சார்ந்திராதவிடத்து பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தில் பயணம் செய்யும் மாணவர்களின் சிபாரிசு அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கடிதம் மற்றும் சத்தியக் கடதாசி மூலமாக.

7.3 இதற்கு மேலதிகமாக அவசியம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதிகாரசபையினால் 7.2 விடயத்திற்கு சமமாக அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினால் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை மூலமாக.

8. அனுமதிப்பத்திரம் இதன் அட்டவணை 2 இற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திர ஆவணம் (விண்ட்ஸ்கிரீன் லேபல்) இதன் மூன்றாவது அட்டவணைக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

10. அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் நான்காவது அட்டவணைக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

*11. அனுமதிப்பத்திரமொன்று செல்லுபடியாவதற்கு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பப்படிவங்களும் அவ்வனுமதிப்பத்திரம் செல்லுபடியாக்குவதற்கு விண்ணப்பிப்பவரால் எதிர்பார்க்கப்படும் தினத்திற்கு ஒரு மாதத்திற்கு குறையாத கால அளவிற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*12. அனுமதிப்பத்திரம் கீழ்க் குறிப்பிடப்படும் கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உள்ளடங்கும்.*

*12. 1 எவரேனும் ஒருவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை அவரது விருப்பப்படி வேறு ஒருவருக்கு வழங்கலாகாது. அவ்வாறு வழங்குவது சட்டவலிதற்றதாகும். அவ்வாறானசந்தர்ப்பம் தெரியவருமிடத்து அவ்வனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறாக இருந்தபோதும் அதிகாரசபையின் கொள்கைகளுக்கும் பங்கம் ஏற்படாமலும் சிறந்த பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்காக அவசியம் என அதிகாரசபை கருதும் சந்தர்ப்பங்களில் அனுமதிப்பத்திர உரிமையினை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை அதிகாரசபை எடுக்க முடியும்.*

*12.2 வேறுவகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி வழங்கப்படும் தினத்திலிருந்து 12 மாத காலத்திற்கு அனுமதிப்பத்திரம் செயல்வலுவிலிருக்கும்.*

*12. 3 அனுமதிப்பத்திர உரிமையாளர் மற்றும் அவரது சேவையாளரினால் உரிய சேவையினை வழங்குவதற்காக ஈடுபடுத்தப்படும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனம் ஓட்டத்திற்கு தகுந்த நல்ல நிலையில் இயந்திரம் இருப்பதும் மற்றும் சுத்தமான நிலை என்பனவற்றின் மூலம் பராமரிக்கப்படல் வேண்டும்.*

*12.4 இவ்வொழுங்கு விதிகளில் அனுமதிப்பத்திர உரிமையாளரின் பொறுப்புக்களும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான சாரதிகளினதும் செயற்குழுவினரதும் பொறுப்புக்களுமென அனுமதிப்பத்திரத்திற்கான விதிகளும் நிபந்தனைகளும் கருதப்படல் வேண்டும்.*

*12.5 சேவையின் தரம் மற்றும் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக்காக அதிகாரசபையினால் அவ்வப்போது விதிக்கப்படும் ஏற்பாடுகளை செயற்படுத்தல் வேண்டும்.*

*13. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனத்தில் காட்சிப்படுத்தப்படவேண்டிய மற்றும் வைத்திருக்கப்பட வேண்டிய ஆவணங்கள்.*

*13.1 சாரதி பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனத்தில் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் :*

(அ) அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதி (அட்டவணை 2) ;
(ஆ) லேபல் (அட்டவணை 3) ;
(இ) அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாடகை கட்டணப் பட்டியல் ;
(ஈ) மோட்டார் வாகன போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் கீழ் வைத்திருக்கவேண்டியவை ;

(i) வருமான அனுமதிப்பத்திரம் ;
(ii) காப்புறுதிப்பத்திரம் ;
(iii) சாரதி அனுமதிப்பத்திரம்.

*13. 2 காட்சிப்படுத்தப்பட வேண்டியவை :*

(அ) அனுமதிப்பத்திர ஆவணத்தின் புகைப்படப்பிரதி ;
(ஆ) நிர்ணயிக்கப்பட்ட கட்டண சூத்திரத்தை தெரிவிக்கும் கட்டணப்பட்டியல் ;
(இ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர இலக்கமும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனத்தின் பதிவிலக்கமும்.

*14. அனுமதிப்பத்திர உரிமையாளரின் பொறுப்புக்கள் ;*

*14.1 போக்குவரத்துச் சேவையின் மேம்பாடு மற்றும் நிர்வாக வசதிக்காக அனுமதிப்பத்திர உரிமையாளரினால் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட பஸ்வண்டி உரிமையாளர்கள் சங்கமொன்றில் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*14.2 பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனம் ஏதேனும் திடீர் விபத்திற்குள்ளாகி 7 தினங்களுக்குள் பஸ்வண்டி உரிமையாளர்கள் சங்கத்தினூடாக அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.*

*14.3 பாரதூரமான அல்லது மரணம் சம்பவித்த வாகன விபத்து சம்பந்தமாகவெனில் புதிய தகுதிச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படும் வரை பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனத்தை செலுத்தாதிருத்தல் வேண்டும்.*

14.4. மரணம் சம்பவித்த வாகன விபத்து ஏற்பட்ட பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனத்தின் சாரதியொருவர் தேகாரோக்கியத்துடன் இருப்பதாக உறுதிப்படுத்தப்படும் வரை மீண்டும் சேவையில் ஈடுபடலாகாது (மரணம் சம்பவித்த விபத்து என்பது விபத்துக்குள்ளான நபரொருவர் அக்காரணத்தினாலேயே மரணமடைதலைக் குறிக்கும்).

14. 5 பாடசாலை நடைபெறும் ஒவ்வொரு தினங்களும் கட்டாயம் சேவையில் ஈடுபடல் வேண்டும்.

14. 6 அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்கப்படும் விவரங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமிடத்து அந்த மாற்றம் ஏற்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.

15. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனத்தின் சாரதி மற்றும் பணியாளர்களின் பொறுப்புக்கள் :-

15.1 சாரதியும் பணியாளர்களும் அதிகாரசபையில் பதிவு செய்து அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

15.2 பயணம் செய்யும் அனைத்து மாணவர்களினதும் பாதுகாப்பு, சௌகரியம், நம்பிக்கையினை உறுதிப்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனத்தை செலுத்துதல் வேண்டும்.

15.3 அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிக எண்ணிக்கையான மாணவர்களுடன் வாகனத்தை செலுத்துதல் கூடாது.

15.4 அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாகனத்தினுள் முதலுதவிப்பெட்டி இருக்கவேண்டுமென்பதோடு சாரதியும் பணியாளர்களும் முதலுதவி சம்பந்தமான அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

15.5 குறித்த வாகனத்தில் பயணம் செய்யும் மாணவர்களின் விவரம் சாரதியிடம் இருத்தல் வேண்டும்.

15.6 குறித்த பாதையில் மாத்திரமே வாகனத்தை செலுத்த வேண்டுமென்பதோடு குறுக்கு வழிகளைப் பயன்படுத்தலாகாது.

15.7 குறித்த நேரத்தில் மாணவர்களை ஏற்றி பாடசாலைக்கு கொண்டு சேர்த்தல் வேண்டும்.

15.8 சிறந்த நடத்தையுடனும் நற்பண்புடனும் இருக்க வேண்டும் என்பதோடு சகல பாடசாலை மாணவர்களிடமும் அரச மற்றும் வேறு உத்தியோகத்தர்களிடமும் பண்பாட்டு வழுமியங்களுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

15.9 மதுபானம் அல்லது போதைவஸ்து பயன்படுத்திய நிலையில் சேவையில் ஈடுபடுவதோ சேவைக் காலத்தினுள் மதுபானம் அல்லது போதைவஸ்து பயன்படுத்துவதோ கூடாது.

15.10 பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைக்கான வாகனத்தினுள் எவரும் புகைபிடிக்க அனுமதிக்கக்கூடாது.

15.11. பொறுப்பற்ற முறையிலும், கவனக்குறைவாக அல்லது அபாயகரமான முறையிலும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தை செலுத்தலாகாது.

15.12 அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் எச்சந்தர்ப்பத்திலும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தையும் இயைபுடைய ஆவணங்களையும் பரீட்சிப்பதற்கு கோரப்படும்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

15.13 அதிகாரசபையினால் அவ்வப்போது நடாத்தப்படும் பயிற்சி அமர்வுகளில் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகன சாரதிகள் மற்றும் பணியாட்தொகுதியினரும் பங்குபற்றுதல் வேண்டும்.

15.14 வீதியில் நெருக்கடி ஏற்படும் விதத்தில் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தை நிறுத்தி வைத்தலாகாதென்பதோடு மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் பொருத்தமான இடத்தில் நிறுத்தி மாணவர்களை பாடசாலைக்கு கொண்டு செல்வது போன்றே பாடசாலையிலிருந்து வீட்டிற்கும் கொண்டு வந்து சேர்த்தல் வேண்டும்.

15.15 பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகன சாரதிகள் மற்றும் பணியாட் தொகுதியினரும் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட சீருடையினை அணிந்து சேவையாற்றுதல் வேண்டும்.

15.16 பாடசாலையிலிருந்து மாணவர்களை பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்திற்கு அழைத்துச் செல்லுதல் அதற்காக நியமிக்கப்பட்ட பணியாளர், சாரதி, அல்லது பணியாட் தொகுதியினரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

15.17 மாணவர்களின் பாதுகாப்புக்காக வானத்தை செலுத்துவதற்கு முன்னதாக அனைத்து மாணவர்கள் தொடர்பிலும் தேடிப்பார்தல் வேண்டும் என்பதோடு வாகனத்தினுள் இருக்கும் மாணவர்களுக்குப் பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குதலும் வேண்டும்.

*15.18 பாடசாலையிலிருந்து மாணவர்களை பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தை எச்சந்தர்ப்பத்திலும் பாடசாலைக்கு அல்லது பெருந்தெருவுக்கு இடைஞ்சல் ஏற்படும் விதத்தில் அதற்கருகாமையில் நிறுத்திவைத்தலாகாது, என்பதோடு பொருத்தமான இடத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்தல் வேண்டும்.*

*15. 19 திடீர் விபத்து, தொழில்நுட்பக் கோளாறு போன்ற தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தை பயண முடிவிடத்திற்கு கொண்டு செல்ல முடியாத சந்தர்ப்பத்தில் அதில் அழைத்துச் செல்லப்படவேண்டிய மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அம் மாணவர்களுக்கு மாற்று மாற்றுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்க சகல நடவடிக்கைகளும் எடுத்தல் வேண்டுமென்பதோடு மாணவர்களின் பெற்றோருக்கோ அல்லது பாதுகாவலர்களுக்கோ அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

***16 பாடசாலை மாணவர்களினதும், பெற்றோர்/பாதுகாவலர்களினதும் பொறுப்புக்கள் :-***

*16.1 பாடசாலை மாணவர்கள் தமக்கு போக்குவரத்து வசதியினை பெற்றுக் கொள்வதற்காக குறித்த இடத்திற்கு சமுகமளித்ததன் பின்னர் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகன சாரதியினால் வழங்கப்படும் அறிவுறுத்தலுக்கு அமைவாக வாகனத்தில் பாதுகாப்பாக ஏறுதலும் இறங்குதலும் வேண்டும்.*

*16.2 அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெரிய மாணவர்களால் வயதில் குறைந்த மாணவர்களினது பாதுகாப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.*

*16.3 பெற்றோர்/பாதுகாவலர்களினால் அவ்வப்போது தமது பிள்ளைகள் போக்குவரத்துச் செய்கின்ற பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகன சாரதி மற்றும் பணியாட்டொகுதியினர் தொடர்பில் அவதானமாக இருத்தல் வேண்டும். ஒழுங்கீனமோ அல்லது தகுதியீனமோ இருப்பின் அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.*

*16.4 தீடீர் விபத்து, தொழில்நுட்பக் கோளாறு போன்ற தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை வாகனத்தை பயண முடிவிடத்திற்கு கொண்டு செல்ல முடியாத சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக சாரதி அல்லது பணியாட்தொகுதியினரால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

*16.5. பாடசாலை முடிந்த பின்னர் வழமைபோன்று பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தில் மீள வீட்டிற்கு வர ஏதேனும் காரணத்தினால் முடியாதவிடத்து அதனை மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் வாகனத்தின் சாரதிக்கோ அல்லது பணியாட்தொகுதியினருக்கோ அது தொடர்பில் அறிவித்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு முடியாதவிடத்து அதே வாகனத்தை போக்குவரத்து சேவைக்காகப் பயன்படுத்தும் வேறு மாணவர் ஒருவருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.*

***17. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகன செலுத்துநர்கள் அமைப்பின் பொறுப்புக்கள் :-***

*17.1 நல்லுறவை மேம்படுத்தல், சேவையில் முகங்கொடுக்கக்கூடிய பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதனை நோக்காகக் கொண்டு பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை வாகன செலுத்துநர்கள் அமைப்பொன்று ஏற்படுத்தப்பட முடியும். தமது சங்கத்திற்கு அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளல், சட்டபூர்வமான பின்புலத்தின் கீழ் செயற்படுத்தல் அமைப்புக்குரிய பொறுப்பாகும். இவ்வமைப்பு பிரதேச, மாவட்ட மாகாண அமைப்பு என்ற வகையில் விரிவுபடுத்தி மிகவும் காத்திரமான வியூகங்களுடன் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.*

*17.2 இவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக இந்த அமைப்பைச் சார்ந்த ஓட்டுநர்கள் செயற்படுகின்றனரா என்பதை கவனித்துக் கொள்ளல் அவ்வமைப்பிற்குரிய பொறுப்பாகும்.*

*17. 3 அதிகார சபையினால் கோரப்படும் சிபார்சு மற்றும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்போது அதிகாரசபைக்கு தேவையான உதவிகளை வழங்கி அதிகாரசபையுடன் ஓட்டுநர் அமைப்புக்கள் சிறந்த தொடர்பினைப் பேணல் வேண்டும்.*

*17.4 இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான எற்பாடுகளை அமைப்பினது யாப்பில் உட்சேர்த்தல் வேண்டும்.*

*17.5 பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவையினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் சீர்செய்தல் சம்பந்தமாக அவ்வப்போது அதிகாரசபையினால் பொறுத்தமானதெனக் கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமாக இயற்றப்படும் ஒழுங்குவிதிகளைச் செயற்படுத்துவதற்கு அவ்வமைப்பு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.*

18. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகன தரிப்பிடம் தொடர்பான ஒழுங்குவிதிகள்.

18. 1 உள்ளூராட்சிமன்றங்கள், பொலிஸ் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அல்லது அதிகாரசபையின் உடன்பாட்டுடன் தேவையான பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகன தரிப்பிடங்களை தாபித்துக் கொள்ளுதல் வேண்டும்.

18.2 அதிகாரசபையினால் இயற்றப்பட்ட நிபந்தனைகளின் கீழ் செலுத்துநர் அமைப்பினால் அந்த தரிப்பிடத்தின் கட்டுப்பாடும் நிர்வாகமும் செய்யப்படல் வேண்டும்.

18.3 உள்ளூராட்சிமன்றங்களுக்கு தரிப்பிடங்களினால் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் வெவ்வேறாக அந்தந்த அனுமதிப்பத்திர உரிமையாளரினால் அல்லது அமைப்பினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

19. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சாரதிகளினால் அல்லது பணியாட் தொகுதியினரால் கட்டளைகள் மீறப்படுவது சம்பந்தமாக அனுமதிப்பத்திர உரிமையாளரே பொறுப்புக்கூறவேண்டியவராவார்.

20. இக்கட்டளையின் கீழ் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திர உரிமையாளரொருவரினால் அதிகாரசபையிடம் அதனைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்கப்படும் பட்சத்தில் அவ் அனுமதிப்பத்திர உரிமையாளர்:

(i) இக்கட்டளைகளுக்கு அமைவாக அத்துடன்/அல்லது அதனகத்து குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக செயற்பட்டுள்ளார் என்றும் ;

(ii) இக்கட்டளைகளின் கீழும் அதனகத்து குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை மீறி ஏதேனும் தவறிழைத்த குற்றவாளியாக காணப்பட்ட ஒருவரல்ல என்றும் ;

(iii) அதிகாரசபைக்கு செலுத்தப்படவேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட சகல கட்டணங்களையும் செலுத்தியிருப்பதோடு ஏனைய இயைபுடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திருப்பதாகவும்.

திருப்தியடையும் பட்சத்தில் அவ் அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் தினத்தை தாண்டிய தினத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு அல்லது அதைவிட குறைந்த காலத்திற்கு அவ்வனுமதிப்பத்திரம் அதிகாரசபையினால் புதுப்பித்து வழங்கப்படும்.

21. இந்த கட்டளைகளை மீறுதல், விலகிச் செயற்படல், கருத்திலெடுக்காது செயற்படும் எவரேனும் ஒருவர் குற்றமிழைத்தவராவார்.

22. அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாளோ அல்லது சோதனைக்குழுவினராலோ செய்யப்படும் சோதனைகளில் இக்கட்டளையின் அட்டவணை 5 இன் கீழுள்ள கட்டளை மீறப்பட்டுள்ளதாக அந்த கட்டளையை மீறிய தரப்பாக ஏற்கப்படும் சந்தர்ப்பத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு.

(i) சோதனையின்போது நிரூபணமாகும் கட்டளை மீறலை எதிர்காலத்தில் செய்வதில்லை என்றோ அல்லது சரிசெய்து கொள்வதாகவோ வெளிப்படுத்துகை ஒன்றில் கையொப்பமிடல் ;

(ii) அட்டவணை 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தவறு சம்பந்தமாக ரூபா 400 அதிகாரசபையினால் அறவீடு செய்யப்படுவதற்கு ;

(iii) மேலே (i) மற்றும் (ii) ஆகிய நடவடிக்கைகளை இரண்டையும் எடுப்பதற்கு ;

(iv) அனுமதிப்பத்திர உரிமையாளர் மேலே (i) மற்றும் (ii) இன் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படாவிட்டால் அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு எதிராக 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தென் மாகாண மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை செய் சட்டத்தின் 23 ஆம் அல்லது 42 ஆம் பிரிவிற்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு.

23. பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை ஓட்டுநர்கள் அமைப்பு பின்பற்றவேண்டிய செயல் முறைகள் சம்பந்தமாக அறிவுரைகளை வழங்குவதற்கும், அவர்களது செயற்பாட்டறிக்கை அதிகாரசபைக்கு அளிக்கவேண்டிய அறிக்கைகள் மற்றும் வாகனத்தில் காட்சிப்படுத்தப்படவேண்டிய அறிவித்தல்கள் சம்பந்தமாகவும் அறிவுரைகளை வழங்குவதற்கும் அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு.

24. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனம் அந்த சேவை வழங்கும் காலத்தின் பின்னர் பயணிகள் தேவைக்காக விசேட சேவையில் ஈடுபடுத்துவதற்கு அதிகாரமளிக்கும் சுற்றறிக்கை அதிகாரசபையினால் வெளியிடப்படும்.

***அட்டவணை 1***

**தென் மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை**

*பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்*

1. தற்போது அனுமதிப்பத்திரம் இருப்பின் அதன் இலக்கம் :

2. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தின் பதிவிலக்கம் :

3. பாடசாலை மாணவர் போக்குவர்த்து சேவை தரிப்பிடம் :..........................................................................................

4. பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை இடம்பெறும் பாதை :..........................................................................

5. பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்லும் பாடசாலை மற்றும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல் (மாணவர்களின் பெயர்ப்பட்டியல் கடிதமொன்றுடன் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

1. :.................................... ......................................................................................................................

2. :.............................................................................................................................................................

3.:.................................... ....................................................... ...........................................................................

6. விண்ணப்பதாரி தொடர்பான தகவல்கள் :

6.1 முழுப்பெயர் :...............................................................................................................................
..........................................................................................................................................................
6.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :..................................................................................................
6.3 முகவரி :.........................................................................................................................................
6.4 தொலைபேசி இலக்கம் :..................................................................................................................
6.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................................
6.6 பிறந்த திகதி :...................................................................................................................................
6.7 விவாகமானவராயின் வாழ்க்கைத்துணையின் பெயரும் முகவரியும் :......................................................
..........................................................................................................................................................
6.8 விண்ணப்பதாரியின் வதிவிடம் தொடர்பான தகவல்கள் :................................................................
6.8.1 மாகாணம் :.....................................................................................................................................
6.8.2 மாவட்டம் :....................................................................................................................................
6.8.3 பிரதேச செயலாளர் பிரிவு :............................................................................................................
6.8.4 பொலிஸ் பிரிவு :.............................................................................................................................
6.8.5 கிராம சேவகர் பிரிவு :.....................................................................................................................

6.9. விண்ணப்பதாரி அரச திணைக்களமொன்றில்/கூட்டுத்தாபனமொன்றில்/நியதிச் சட்டசபையொன்றில்/படைதாங்கு சேவையில் தற்போது சேவையாற்றுபவரா?

(ஆம் / இல்லை) *

6.9.1 “ஆம்” எனில் குறித்த நிறுவனத்தின் பெயர் :.........................................................................

6.10. வங்கிக் கணக்கு விவரம் :

6.10.1 வங்கியின் பெயர் :................................................................ ..........................................................
6.10.2 வங்கிக் கிளை :.............................. ............................................................... ................................
6.10.3 கணக்கு இலக்கம் :........................................................................ ...............................................

7. காப்புறுதி தொடர்பான விவரங்கள் :.

7.1 காப்புறுதி நிறுவனத்தின்/கூட்டுத்தாபனத்தின் பெயர் :............................................................ ..................
7.2 காப்புறுதி வகை :.......................................................................................................................................
7.3 காலாவதித் திகதி :..............................................................................................................................

8. வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான விவரங்கள் :

8.1 வருமான அனுமதிப்பத்திரத்தின் காலாவதித் திகதி :...............................................................................................
8. 2 பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :..............................................................................................................

9. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சாரதி தொடர்பான தகவல்கள் (உரிமையாளர் சாரதியாக செயற்படுவாராயின் 9.1 தொடக்கம் 9. 7 வரை பூரணப்படுத்தத் தேவையில்லை).

9.1 முழுப்பெயர் :.............................................................................................. ..................................................
9. 2 முதலெழுத்துக்களுடன் பெயர் :.........................................................................................................................
9. 3 முகவரி :.............................................................................................................................................
9. 4 தொலைபேசி இலக்கம் :........................................................................................................................
9. 5 தேசிய அடையாள அட்டை இல. :............................................................................................................
9.6 பிறந்த திகதி ..........................................................................................................
9.7 விகாகமானவராயின் வாழ்க்கைத்துணையின் பெயர் மற்றும் முகவரி : ...................................
.........................................................................................................................................................................
9.8 சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :.......................................................................................................
9.9 சாரதி அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட திகதி : .................................................................................
9.10 சாரதி அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் திகதி : ..............................................................

10. சங்கமொன்றில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பான விவரங்கள்:

10.1 சங்கத்தின் பெயர் :...........................................................................................................................
10.2 அங்கத்துவ இலக்கம் :.........................................................................................................................

11. தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபையினால் நடாத்தப்படும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சாரதி பயிற்சி நெறியில் பங்குபற்றியுள்ளாரா?

(ஆம்/இல்லை) *

11. 1 ஆம் எனில் திகதியும் இடமும் :..............................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானதும், சரியானதுமென உறுதியளிக்கின்றேன். எனக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் தொடர்பான கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் மீறப்படுமாயின் அல்லது அதிகாரசபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயற்படாதுவிடின் எனது அனுமதிப்பத்திரத்தை அதிகாரசபையினால் மீளபெற்றுக் கொள்வதற்கோ/இடைநிறுத்துவற்கோ/இரத்துச் செய்வதற்கோ அல்லது சட்டப்படி தண்டனைக்குட்படுத்தப்படுவதற்காகவோ ஆளாவேன் என நன்கறிவேன்.

................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.....................

* பொருத்தமற்றதை கீறிவிடுக.

**அட்டவணை 1 (அ)**

**விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்**

1. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனம் பதிவு செய்யப்பட்டமைக்கான அத்தாட்சி அல்லது அத்தகைய பதிவினை செய்தமை தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் சான்றிதழின் புகைப்படப் பிரதி.
2. பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை வாகனத்தில் பயணம் செய்யும் மாணவர்கள் சகலருக்குமான பூரண காப்புறுதி செய்யப்பட்ட காப்புறுதிச் சான்றிதழ் ;
3. வருடாந்த வருமான அனுமதிப்பத்திரமும் அதன் புகைப்படப் பிரதியும்.
4. சாரதி அனுமதிப்பத்திரத்தின் புகைப்படப்பிரதி.

5. அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காகவெனில், தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமும் லேபலும்.

6. அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு.


7. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனம் வேறு மாகாண சபையொன்றில் சேவையில் ஈடுபட்ட பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனமெனில் அந்த மாகாண சபையினால் வழங்கப்பட்ட விடுவிப்புக்கு கடிதம்.

8. அவசியம் ஏற்படுமிடத்து அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட செலுத்துநர்கள் அமைப்பினால் வழங்கப்பட்ட அங்கத்துவச் சான்றிதழ்.

***அட்டவணை 2***

**பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தென் மாகாண மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தென் மாகாண மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை திருத்தச் சட்டத்திற்கு அமைவாக வழங்கப்பட்டது.*



Commencing Date :
Seating Capacity :
Route :
Book No :

Validity Period : From To
Parking Place :
L.G. Authority :
Police Division :

Date :

Chairman/Director General
Southern Provincial Road Passenger Transport Authority

SOUTHERN PROVINCIAL ROAD PASSENGER TRANSPORT AUTHORITY
STATUTE No.02 OF 1996 & AMENDED STATUTE No.01 OF 2009
PASSENGER SEVICE PERMIT FOR THE OPERATION OF A REGULER SERVICE FOR THE CARRIAGE OF PERSONS
(SECTION 11)

SPRPTA


REGULAR SCHOOL CHILDREN TRANSPORT SERVICE PERMIT

Permit No
Vehicle No

Owner Name:
N.I.C No:
Address:

*அட்டவணை 3*

**அனுமதிப்பத்திர லேபல்**



දකුණු පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය
தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை
SOUTHERN PROVINCIAL ROAD
PASSENGER TRANSPORT AUTHORITY
SPRPTA

පාසල් සිසුන් ප්‍රවාහන නිත්‍ය සේවා අවසර පත්‍රය
பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரம்
REGULARSCHOOL CHILDREN TRANSPORT SERVICE PERMIT

| අවසර පත්‍ර අංකය / அனுமதிப்பத்திர இல./ Permit No | වාහන අංකය / வாகன இல / Vehicle No |
| --- | --- |
| | |

මාර්ගය / வழி / Route

உள்ளூராட்சி மன்றம்

වලංගු කාලය/ செல்லுபடியாகும் காலம் /Validity Period

සිට / இருந்து /From දක්වා /வரை /To

නැවතුම් ස්ථානය / Parking Place / தரிப்பிடம் :

පළාත් පාලන ආයතනය / / Local Government Authority :

පොලිස් වසම / பொலிஸ் பிரிவு / Police Division :

Date :

No. A 10 0000715

සභාපති தலைவர் / Chairman / අධ්‍යක්ෂ ජෙනරාල් / பொதுப்பணிப்பாளர் / Director General
දකුණු පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය / தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை
Southern Provincial Road Passenger Transport Authority

දකුණු පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය
தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை
SOUTHERN PROVINCIAL ROAD
PASSENGER TRANSPORT AUTHORITY
SPRPTA

පාසල් සිසුන් ප්‍රවාහන නිත්‍ය සේවා අවසර පත්‍රය
பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரம்
REGULARSCHOOL CHILDREN TRANSPORT SERVICE PERMIT

| අවසර පත්‍ර අංකය / அனுமதிப்பத்திர இல /Permit No | වාහන අංකය / வாகன இல./ Vehicle No |
| --- | --- |
| | |

මාර්ගය / வழி / Route

වලංගු කාලය / செல்லுபடியாகும் காலம் / Validity Period

සිට / இருந்து / From දක්වා / வரை / To

නැවතුම් ස්ථානය /தரிப்பிடம் / Parking Place :

පළාත් පාලන ආයතනය / / Local Government Authority :

පොලිස් වසම / பொலிஸ் பிரிவு / Police Division :

Date :

No. A 10 0000715

සභාපති தலைவர் / Chairman / අධ්‍යක්ෂ ජෙනරාල් / பொதுப்பணிப்பாளர் / Director General
දකුණු පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය / தென் மாகாண வீதிப்பயணி போக்குவரத்து அதிகாரசபை

### *அட்டவணை 4*

### *அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணங்கள்*

*இந்த அட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படும் ஏதேனும் விடயமொன்றிற்கான செயற்பாட்டிற்காக செலுத்தப்படவேண்டிய கட்டணம் II ஆம் நிரலில் நேரொத்த விதத்தில் காணப்படும் கட்டண அளவாக இருத்தல் வேண்டும்.*

| | I ஆம் நிரல் செயற்பாடுகள் | II ஆம் நிரல் செலுத்தப்பட வேண்டிய கட்டணத் தொகை ரூபா சதம் |
|---|---|---|
| 1. | வருடாந்த சேவைக் கட்டணம். | 1,000.00 |
| 2. | பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் வருடாந்தக் கட்டணம். | 100.00 |
| 3. | பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரத்தை குறித்த தினத்தில் நீடிக்காததன் காரணமாக ஒட்டுமொத்த நிலுவைத் தொகை 10% மேலதிகமாக அறவிடல்). | |
| 4. | பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரம் காணாமல் போனதற்காக பிரதி யொன்றை வழங்குதல். | 250.00 |
| 5. | பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திர (லேபல்) பிரதி | 100.00 |
| 6. | பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரமொன்று வழங்குதல் | 1.000.00 |
| 7. | பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திர உரிமையினை சீர்செய்தல் கட்டணம். | 5,000.00 |
| 8. | அனுமதிப்பத்திர உரிமையாளர் மரணமடையும் பட்சத்தில் சட்டபூர்வமான உரித்துடைமை உடைய நபருக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் (மனைவி/கணவன்/பிள்ளை) | 1,000.00 |
| 9. | அனுமதிப்பத்திர உரிமையாளர் மரணமடையும் பட்சத்தில் சட்டபூர்வமான உரித்துடைமை அல்லாத நபருக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் (இலக்கம் 7 இற்கான கட்டண முறை ஏற்புடையதாகும்) (அதேபோன்று இலக்கம் 1 மற்றும் இலக்கம் 2 இற்கான கட்டணங்களும் சேர்க்கப்படல் வேண்டும்.) | |
| 10. | பாடசாலை மாணவர் போக்குவரத்து நிரந்தர சேவை அனுமதிப்பத்திரத்திற்காக வேறு பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தை ஈடுபடுத்தல் | 500.00 |

*இணைப்பு 5*

### குற்றங்கள்

1. அனுமதிப்பத்திர லேபலை காட்சிப்படுத்தாமை
2. கட்டணப்பட்டியலை காட்சிப்படுத்தாமை
3. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவையில் அனுமதிக்கப்பட்ட பயணிகள் எண்ணிக்கையை குறிப்பிடாமையை
4. அனுமதிப்பத்திர இலக்கத்தை பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை வாகனத்தில் குறிப்பிடாமை
5. பணியாட்தொகுதியினரது சீருடையினை அணியாது பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தின் மூலம் மாணவர்களை ஏற்றிச் செல்லல்.
6. அனுமதிப்பத்திரமின்றி பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லல்
7. மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை அருகில் வைத்திருக்காது பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லல்
8. ஏனைய பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகன செலுத்துநர்களினதும் வருமானங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் ஏனைய செலுத்துநர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் விதத்திலும் விரும்பியவாறு வாகனத்தை செலுத்துதல்.
9. அனைத்து முச்சக்கரவண்டிகளினதும் வருமானங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் விரும்பியவாறு வாகனத்தை
10. அனுமதிக்கப்பட்ட கட்டணத்தை அறவிடாமை
11. பெரும் சப்தம் ஏற்படும் வகையில் ஒலி எழுப்பும் கருவியினைப் பயன்படுத்தல்.
12. அரசாங்கத்தினால் பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை வாகனம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படாமை.
13. பாடசாலை நடைபெறும் தினங்களில் சேவையில் ஈடுபடாமை.
14. வேறு தவறுகள்

இவ்வொழுங்குவிதித் தொகுதியில் சிங்கள/தமிழ்/ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

**வரைவிலக்கணம்** :

1. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை என்பது சிறிய பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து எனப் பொருள்படும்.

2. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனம் என்பது 5 ஆசனங்களைவிட அதிகமான கொள்ளவைக் கொண்ட கட்டணம் அறவிடும் அல்லது வாடகை அடிப்படையில்

   சிறிய பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் பாடசாலை மாணவர்கள் பாடசாலை மற்றும் வீட்டிற்கிடையே போக்குவரத்து நாளாந்தம் போக்குவரத்துச் செய்யும் வாகனம் எனப் பொருள்படும்.

3. பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத் தரிப்பிடம் என்பதனால் கருதப்படுவது கட்டணம் அறவிடும் அல்லது வாடகை அடிப்படையில் பாடசாலை மாணவரக்ளுக்கு போக்குவரத்து சேவையினை வழங்குவதற்கான பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை வாகனத்தை நிறுத்துமிடம் எனப் பொருள்படும்.

4. ஓட்டுநர்களின் அமைப்பு என்பது பாடசாலை மாணவர் போக்குவரத்துக்குரிய சபையினது நிறுவனச் சட்டம். கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலோ வேறு அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றில் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று /இயக்கம் அல்லது தென் மாகாண மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பொன்றாகும்.

10- 603/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.